# *உருமு தனலெட்சுமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 620 019.*

## *தமிழாய்வுத்துறை*

### *பகுதி 1 தமிழ் - முதலாமாண்டு இரண்டாம் பருவம்*

### *வினாவங்கி*

1. பன்னிரு திருமுறைகள் யாவை?
2. திரு அங்கமாலை - பெயர்க்காரணம் தருக.
3. திரு அங்கமாலை குறிப்பிடும் சிவபெருமானின் பெயர்கள் யாவை?
4. சிவபெருமானின் அடியையும் முடியையும் காணச்சென்றவர்கள் யாவர்? எவ்வடிவு கொண்டு சென்றனர்?
5. உன் பாடப்பகுதியில் அமைந்த திருநாவுக்கரசர் தேவாரம் எவ்வூர் இறைவன் மீது பாடப்பட்டது?
6. உன் பாடப்பகுதியாய் அமைந்த சுந்தரர் தேவாரம் எவ்வூர் இறைவன் மீது பாடப்பட்டது?
7. அப்பர் பெருமானுக்கு ஈசன் கயிலைக் காட்சியைக் காட்டிய தலம் எது? எந்த நாளில் இத்திருவிழா நிகழும்?
8. திருவையாற்றில் உள்ள சிவபெருமான், உமையம்மை ஆகியோரின் பெயர்கள் யாவை?
9. பிஞ்ஞகன் என்ற சொல்லின் பொருள் யாது?
10. தமிழ்ச் சாத்திரம் எனப்படும் நூல் எது?
11. திருமந்திரம் எத்தனை மந்திரங்களைக் கொண்டது?
12. பெரியாழ்வாரின் இயற்பெயர் யாது?
13. பெரியாழ்வாருக்கு வழங்கப்பட்டப் பட்டப்பெயர் என்ன?
14. ‘விப்ர நாராயணர்’ என்று அழைக்கப்பட்டவர் யார்?
15. தொண்டரடிப்பொடியாழ்வார் எழுதிய பாசுரங்களின் பெயர்கள் யாவை?
16. திருப்பாணாழ்வார் எக்குலத்தைச் சார்ந்தவர்? அவர் எழுதிய பாசுரத்தின் பெயர் என்ன?
17. நம்மாழ்வாரை வழிபட்டு ஆழ்வார் ஆனவர் யார்? அவர் பாசுரத்தின் பெயர் என்ன?
18. பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் 10 பருவங்கள் யாவை?
19. குமரகுருபரர் இயற்றிய நூல்கள் யாவை?
20. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் எவ்வூர் இறைவன் மீது பாடப்பட்டது?
21. ‘செங்கீரைப் பருவம்’ - எதைக் குறிக்கும்?
22. அம்புலிப் பருவம் என்றால் என்ன?
23. நந்திக் கலம்பகத்தின் பாட்டுடைத் தலைவன் யார்?

24. கலம்பக நூல்களின் உறுப்புகள் எத்தனை?
25. நந்திக்கலம்பக நூலாசிரியர் யார்?
26. தூது நூல்களின் இரண்டு வகை பகுப்புகள் யாவை?
27. தூது இலக்கியம் எந்தப் பா வகையில் பாடப்படும்?
28. தமிழ்விடு தூது எத்தனை கண்ணிகளைக் கொண்டது?
29. தமிழ்விடு தூது - நூலாசிரியர் யார்?
30. தமிழ்விடு தூதில் யாரிடம் மாலை வாங்கி வருமாறு தமிழ் அனுப்பப்படுகிறது?
31. தமிழில் முதலெழுத்துக்கள் எத்தனை? சார்பெழுத்துக்கள் எத்தனை?
32. தமிழுக்கு ஊட்டப்பட் பால் எது?
33. தமிழில் உள்ள செய்யுள் சொல்லின் 4 வகை யாவை?
34. தமிழில் உள்ள அலங்காரங்கள் எத்தனை?
35. தமிழில் உள்ள பண்கள் யாவை?
36. தமிழ் எதனைச் செங்கோலாகக் கொண்டது?
37. தமிழ் பெற்ற பிள்ளைகள் யாவை?
38. தமிழ்மொழியின் நில எல்லை யாது?
39. தமிழின் அரண்மனை எங்குள்ளது?
40. தமிழின் வாகனம் எது?
41. தமிழுக்குப் புரோகிதர் யாவர்?
42. தமிழின் தோழர்கள் யாவர்?
43. தமிழின் சேனாதிபதிகள் யாவர்?
44. தமிழின் சேனைகள் எது?
45. குறவஞ்சி - இலக்கியத்தின் இலக்கணம் யாது?
46. திருக்குற்றாலக் குறவஞ்சியை இயற்றியவர் யார்?
47. திருக்குற்றாலக் குறவஞ்சி எவ்வூர் இறைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது?
48. குற்றாலக் குறவஞ்சியைப் பாராட்டி, பரிசளித்த மன்னன் யார்?
49. கலிங்கத்துப்பரணியை இயற்றியவர் யார்?
50. பரணி இலக்கியத்தின் இலக்கணம் யாது?
51. காளமேகப்புலவர் இயற்றிய நூல்கள் யாவை?
52. ஔவையாரின் பெற்றோர்களாகக் குறிக்கப்பட்டோர் யாவர்?
53. ‘தனிப்பாடல் திரட்டு’ நூலில் பாடல்கள் எழுதிய புலவர்கள் மூவரைக் குறிப்பிடுக.